மத்திய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

புதுக்கோட்டையில் வியாழக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர்.

புதுக்கோட்டை, பிப். 8: மத்திய அரசைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், தோழமைக் கட்சிகளுடன் இணைந்து புதுக்கோட்டையில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். புதுக்கோட்டை சின்னப்பா பூங்கா அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் எஸ். கவிவர்மன் தலைமை வகித்தார்.

கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் மதுக்கூர் ராமலிங்கம், திமுக வடக்கு மாவட்டச் செயலர் கே.கே. செல்லப்பாண்டியன், எம்எல்ஏக்கள் எம். சின்னதுரை (கந்தர்வகோட்டை), வை. முத்துராஜா (புதுக்கோட்டை), திமுக இலக்கிய அணித் துணைத் தலைவர் இராசு கவிதைப்பித்தன், நகரச் செயலர் ஆ.செந்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் த. செங்கோடன், மதிமுக மாவட்டச் செயலர் கே.கலியமூர்த்தி, திக நகரத் தலைவர் தர்மராஜன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டு பேசினர். எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு உரிய நிதிப் பகிர்வை மறுப்பது, பேரிடர் நிவாரண நிதியை ஒதுக்க மறுப்பது, ஜிஎஸ்டி வரியில் உரிய பங்கீட்டை மறுப்பது, மாநிலங்களின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுவது போன்ற மத்திய அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

மறியலில் ஈடுபட்ட 80 பேர் மீது வழக்கு

கந்தர்வகோட்டை, பிப். 8: கந்தர்வகோட்டை அருகே மறியலில் ஈடுபட்ட பெண்கள் உளளிட்ட 80 பேர் மீது போலீஸார் வியாழக்கிழமை வழக்குப்பதிவு செய்தனர்.

கந்தர்வகோட்டை ஒன்றியம், மட்டங்கால் கிராமத்தில் உள்ள காளியம்மன் கோயிலில் புதன்கிழமை மதியம் ஒரு தரப்பினர் நடத்திய கறிவிருந்து பூஜையில் பங்கேற்றவர்கள் கோயில் வளாகத்தில் மது அருந்தினராம். இதை அந்தப் பகுதி வழியாக சென்ற மற்றொரு தரப்பினர் தட்டிக்கேட்டதால், அவர்களுக்கிடையே வாக்குவாதம், தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதனால், ஆத்திரமடைந்த ஒருதரப்பினர், தங்களை தாக்கியவர்களை கைது செய்ய கோரியும், கோயிலை மூடக்கோரியும் மட்டங்கால் பேருந்து நிறுத்தம் முன்பாக மறியலில் ஈடுபட்டனர். அங்கு வந்த வருவாய் கோட்டாட்சியர் முருகேசன் உள்ளிட்ட அலுவலர்கள் அளித்த உறுதியின்பேரில், மறியல் விலக்கிக் கொள்ளப்பட்டது. மறியலால் 3 மணி நேரத்துக்கும் மேல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதுகுறித்து மட்டங்கால் விஏஓ விக்னேஷ் அளித்த புகாரின்பேரில், கந்தர்வகோட்டை போலீஸார் மறியலில் ஈடுபட்ட தர்மசீலன், கர்ணன், மனோகரன், புகழேந்தி பெண்கள் உள்ளிட்ட 80 பேர் மீது போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

மட்டங்கால் கிராமத்தில் அசம்பாவிதம் ஏதும் ஏற்படாத வண்ணம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

முதல்வரின் முகவரி இணையதளத்தில் 12,365 மனுக்கள் ஏற்பு

தஞ்சாவூர், பிப். 8: தஞ்சாவூர் மாவட்டத்தில் முதல்வரின் முகவரி இணையதளத்தில் பெறப்பட்ட மனுக்களில் இது வரை 12 ஆயிரத்து 365 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன என்றார் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி.

தஞ்சாவூரில் வியாழக்கிழமை நடைபெற்ற மக்களுடன் முதல்வர் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் திருமண நிதியுதவியுடன் 8 கிராம் தங்கம் வழங்கும் விழாவில் அவர் பேசியது:

மக்களுடன் முதல்வர் திட்டம் 2023, டிசம்பர் 18 ஆம் தேதி தொடங்கி, 2024, ஜனவரி 6 ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தில் 3 ஆயிரத்து 805 மனுக்களும், முதல்வரின் முகவரி இணையதளத்தில் 17 ஆயிரத்து 938 மனுக்களும் என மொத்தம் 21 ஆயிரத்து 743 மனுக்கள் பெறப்பட்டன. மக்களுடன் முதல்வர் இணையதளத்தில் பதியப்பட்ட 3 ஆயிரத்து 805 மனுக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, அவற்றைப் பரிசீலனை செய்ததில், 3 ஆயிரத்து 594 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. முதல்வரின் முகவரி இணையதளத்தில் பெறப்பட்டுள்ள மனுக்களில் இதுவரை 12 ஆயிரத்து 365 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

இவ்விழாவில் பல்வேறு துறைகள் சார்பில் 15 ஆயிரத்து 959 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மக்களுடன் முதல்வர் திட்டத்தில் தஞ்சாவூர் கோட்டத்தில் 31 பேருக்கு ரூ. 4.46 கோடியில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. சமூக நலத் துறையின் அனைத்து திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 824 பேருக்கு ரூ. 7.62 கோடியில் தாலிக்கு தங்கமும், நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளன என்றார் அமைச்சர்.

விழாவில் மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப், எம்எல்ஏ துரை. சந்திரசேகரன், டி.கே.ஜி. நீலமேகம், கா. அண்ணாதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் தெ. தியாகராஜன், மேயர் சண். ராமநாதன், துணைமேயர் அஞ்சுகம் பூபதி, மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர். உஷா புண்ணியமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பேச்சு

தஞ்சாவூரில் வியாழக்கிழமை நடைபெற்ற விழாவில் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புக்கு பெருங்கடன் வழங்கிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி.

சித்தப்பாவை கொன்றவருக்கு ஆயுள் தண்டனை

புதுக்கோட்டை, பிப். 8: புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அருகே பூக்கடை வைப்பதில் ஏற்பட்ட பிரச்னையில் சித்தப்பாவைக் கொன்றவருக்கு ஆயுள் தண்டனை விதித்து புதுக்கோட்டை மாவட்ட முதன்மை நீதிமன்றம் வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கியது.

கறம்பக்குடி அருகே உள்ள பந்துவாக்கோட்டையைச் சேர்ந்தவர் கணேசன் (55). இவர் அதே ஊரில் உள்ள செல்லியம்மன் கோயிலில் பூசாரியாக இருந்து வந்தார்.

இந்நிலையில் இவருக்கும் இவரது அண்ணன் முத்தையாவின் மகன் சசிகுமார் (32) என்பவருக்கும் கோயில் முன்பு பூக்கடை வைப்பதில் பிரச்னை இருந்து வந்தது. கடந்த 2021 ஆக. 22ஆம் தேதி கோயில் திருவிழாவின்போது மீண்டும் கடை வைப்பதில் இருவருக்கும் தகராறு ஏற்பட்டது.

அப்போது சசிகுமார் தான் வைத்திருந்த அரிவாளால் கணேசனை சரமாரியாக வெட்டினார். இதில் பலத்த காயமடைந்த அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்த ரெகுநாதபுரம் போலீஸார் சசிகுமாரைக் கைது செய்தனர். இந்த வழக்கு புதுக்கோட்டை மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

வழக்கு விசாரணையின் முடிவில் நீதிபதி கா. பூரண ஜெய ஆனந்த் வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கினார். கொலைக் குற்றத்துக்காக சசிகுமாருக்கு ஆயுள் தண்டனையும் ரூ.10 ஆயிரம் அபராதமும், அபராதத் தொகையைக் கட்டத் தவறினால் மேலும் ஓராண்டு சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

மகிளா சம்மான் முதலீட்டுத் திட்டத்தில் பரிசு

புதுக்கோட்டை, பிப். 8: அஞ்சல் துறையின் திருச்சி மத்திய மண்டல அளவில் மகிளா சம்மான் திட்டத்தில் முதலீடு செய்த வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்ட புதுக்கோட்டையைச் சேர்ந்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

மகிளா சம்மான் மெகா மேளா ஜன. 16 முதல் பிப். 3ஆம் தேதி வரை நடத்தப்பட்டது. இதில் ரூ. 2 லட்சம் முதலீடு செய்த வாடிக்கையாளர்கள் பிரிவில் புதுக்கோட்டை அன்னவாசல் துணை அஞ்சலகத்துக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த ஜமாலம்மாள் என்பவருக்கு ரூ. 2,300 மதிப்புள்ள மேஜை மின்விசிறியும், ரூ. ஒரு லட்சம் வரையிலான முதலீட்டாளர் பிரிவில் புதுக்கோட்டை பெருஞ்சுனை கிளை அஞ்சலகத்துக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த நதியா என்பவருக்கு ரூ. 1640 மதிப்புள்ள இன்டக்சன் அடுப்பும் பரிசுகளாக வழங்கப்பட்டன.

எனவே, பொதுமக்கள் மகிளா சம்மான் உள்ளிட்ட இதர அஞ்சலக சேமிப்புத் திட்டங்களில் கணக்குகளைத் தொடங்கி பயன்பெற வேண்டும் என்று புதுக்கோட்டை அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் முருகேசன் கேட்டுக்கொண்டார்.

புதுக்கோட்டையில் இளைஞர் வெட்டிக் கொலை

புதுக்கோட்டை, பிப். 8: புதுக்கோட்டையில் காதல் பிரச்னையில் இளைஞர் வியாழக்கிழமை வெட்டிக் கொல்லப்பட்டார்.

வெட்டிக் கொல்லப்பட்ட கார்த்தி.

புதுக்கோட்டை அடப்பன் வயல் 6-ஆம் வீதியைச் சேர்ந்த சிங்காரம் மகன் ஒச்சி கார்த்தி (25). இவரது தங்கையும் புதுக்கோட்டை மேல 6ஆம் வீதியைச் சேர்ந்த அரியமுத்து மகன் சீனிவாசனும் (29) காதலித்து வந்ததாகக் கூறப்படுகிறது.

இதற்கு கார்த்தி எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இதனால் கார்த்திக்கும் சீனிவாசனுக்கும் இடையே விரோதம் ஏற்பட்டது. இதுதொடர்பாக கடந்த சில நாள்களாக இவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டதாகவும் தெரிகிறது.

இந்நிலையில், சீனிவாசன் மற்றும் அடப்பன்வயல் 3ஆம் வீதியைச் சேர்ந்த நாகராஜ் மகன் நெருப்பு தினேஷ் (25) உள்ளிட்டோர் கார்த்தியை வியாழக்கிழமை அரிவாளால் வெட்டியுள்ளனர். இதில், பலத்த காயம் அடைந்த கார்த்தி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்த திருக்கோகர்ணம் போலீஸார், கார்த்தியின் சடலத்தைக் கைப்பற்றி புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், வழக்குப் பதிந்து தலைமறைவான சீனிவாசன் உள்ளிட்ட இருவரையும் தேடி வருகின்றனர்.

காலமானார்

ச. பாலகிருஷ்ணன் (83)

பட்டுக்கோட்டை, பிப். 8: தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் வசித்து வந்த மருத்துவர் ச. பாலகிருஷ்ணன் (83) உடல் நலக் குறைவால் வியாழக்கிழமை காலமானார்.

பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் கௌரவ மருத்துவராகப் பணிபுரிந்த இவருக்கு மனைவி மனோன்மணி, 3 மகள்கள், மயக்க மருத்துவராகப் பணிபுரியும் சதாசிவம் என்ற மகனும் உள்ளனர்.

பொதுமக்கள் அஞ்சலிக்காக பட்டுக்கோட்டை -அறந்தாங்கி சாலையில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள பாலகிருஷ்ணனின் உடல், இவர் படித்த தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் மெய்யியல் துறைக்கு வெள்ளிக்கிழமை தானமாக வழங்கப்படுகிறது. தொடர்புக்கு 94431-56780.

RELIGARE ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் (RELIGARE FINVEST LTD.)
CIN:U74999DL1995PLC064132
பதிவு அலுவலகம்: 1407, 14வது தளம், சிரன்ஜீவி டவர், 43, நேரு ப்ளேஸ், புதுதில்லி-110019
கார்பொரேட் அலுவலகம்: 7வது தளம், பேக்ஸ் ஹவுஸ் ப்ளாக் A, Dr.ஜா மார்க் ஓக்லா பேஸ் III, ஓக்லா இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், புதுதில்லி-110020
கிளை அலுவலகம்: 2வது தளம், "ஆயுரம்" பில்டிங், #9, கன்னுசாமி ரோடு, R.S.புரம், கோயம்புத்தூர் - 641002

APPENDIX-IV-A [See proviso to Rule 8(6) & proviso to Rule 9(1)]
அசையா சொத்தின் விற்பனைக்கான ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் 2002, பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை ஏல விற்பனை செய்தல்.

ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் நிறுவனத்தில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாளபூர்வ சுவாதீனத்தில் (Symbolic possession) எடுக்கப்பட்டு கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் 1.ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் எடுகேஷனல் ட்ரஸ்ட், 2. செல்வகுமார் N, 3.சேகர் G, 4. இளங்கோவன் M, 5.நாராயணசாமி சந்திரமோகன், 6. காந்திமதி E மற்றும் 7.பாப்பு R. ஆகியோரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய கடன்தொகையான ₹ 27,01,82,719 (ரூபாய் இருபத்தேழு கோடியே ஒரு லட்சத்து எண்பத்திரண்டாயிரத்து எழுநூற்று பத்தொன்பது மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் 23.02.2024 அன்று விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள் ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

அசையா சொத்து விவரம்

திருச்சி பதிவு மாவட்டம் மற்றும் காட்டுபுதூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட தோளூர்பட்டி கிராமம், தொட்டியம் தாலுகா எண்ணும் முகவரியில் 1.S.F.எண்.349/3 மொத்த பரப்பு ஏக்கர் 1.92 சென்ட் நிலம், 2.S.F.எண்.350/1 மொத்த பரப்பு ஏக்கர் 0.83 சென்ட் நிலம், 3.S.F.எண்.350/2 மொத்த பரப்பு ஏக்கர் 0.40 சென்ட் நிலம், 4.S.F.எண்.350/3, இதில் சப் டிவிஜன் எண்.350/3B ஏக்கர் 0.27 சென்ட் நிலம், 1-லிருந்து 4 வரை ஜட்டங்களின் அயன் புஞ்சை எல்லைகள்: மாரிமுத்து நிலத்திற்கு வடக்கு, முன்சிப்ஸ் குடும்ப நிலத்திற்கு தெற்கு, மகாலஷ்மி நிலத்திற்கு கிழக்கு மற்றும் முன்சிப்ஸ் குடும்ப நிலத்திற்கு கிழக்கு. 5.S.F.எண். 349/6 மொத்த பரப்பு ஏக்கர் 1.29 சென்ட் நிலம். எல்லைகள்: மாரிமுத்து நிலத்திற்கு வடக்கு, மகாலஷ்மி நிலத்திற்கு தெற்கு, மகாலஷ்மி நிலத்திற்கு கிழக்கு, தாமலிங்கம் நிலத்திற்கு மேற்கு. 6.S.F.எண்.350/5 மொத்த பரப்பு ஏக்கர் 1.56 சென்ட் நிலம் மற்றும் கிணறு மற்றும் 5 H.P. பம்ப்செட் E.B. சர்வீஸ் எண்.159, 7.S.F.எண்.350/6 மொத்த பரப்பு ஏக்கர் 1.37 சென்ட் நிலம், 8. S.F.எண்.348/4 மொத்த பரப்பு ஏக்கர் 2.38 சென்ட் நிலம், 9.S.F.எண்.348/3 மொத்த பரப்பு ஏக்கர் 0.79 சென்ட் நிலம், 10.S.F.எண்.351/1B மொத்த பரப்பு ஏக்கர் 1.02 சென்ட் நிலம், 11.S.F.எண்.351/1A மொத்த பரப்பு ஏக்கர் 0.25 சென்ட் நிலம். 6-லிருந்து 11 வரை ஜட்டங்களின் மொத்த பரப்பு ஏக்கர் 7.37 சென்ட் அயன் புஞ்சை எல்லைகள்: காலனி மற்றும் மாரிமுத்து, மகாலஷ்மி நிலத்திற்கு வடக்கு, பழனியாண்டி நிலத்திற்கு தெற்கு, தோளூர்பட்டி சாலை, நல்லதம்பி நிலம் மற்றும் பெரியசாமி நிலத்திற்கு கிழக்கு, தாமலிங்கம், முன்சிப்ஸ் நிலத்திற்கு மேற்கு. மேற்கண்ட 1-லிருந்து 11 வரை பட்டா எண்.3193, 12.S.F.எண்.348/2B ஏக்கர் 0.85 சென்ட் அயன் புஞ்சை நிலம் (பட்டா எண்.2285 பட்டா பாஸ் புத்தகம் எண்.375316). எல்லைகள்: காலனி மற்றும் மாரிமுத்து நிலத்திற்கு வடக்கு, மகாலஷ்மி நிலத்திற்கு தெற்கு, மகாலஷ்மி நிலத்திற்கு கிழக்கு, கிருஷ்ணன் நிலத்திற்கு மேற்கு.

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 23,71,01,045/-
மற்றும் டேவணித்தொகை (EMD): ₹ 2,37,10,105/-

ஏல தேதி & நேரம் : 23.02.2024
காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை
ஏலம் நடைபெறும் இடம்: ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட், 2வது தளம், "ஆயுரம்" பில்டிங், #9, கன்னுசாமி ரோடு, R.S.புரம், கோயம்புத்தூர் - 641002

தெரிந்தவரை வில்லங்கம்
இது தவிர விற்பனை செய்யப்படவுள்ள ஈடுபெற்ற சொத்தின் மீதான எந்தவொரு வில்லங்கமும் RFL-க்கு தெரியாது. விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொத்து பற்றிய தனது சொந்த மதிப்பீட்டை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். கடன் வழங்கியவர் (RFL) மேற்குறிப்பிட்ட ஈடுபெற்ற சொத்தின் தகுதிக்கு எந்தவொரு உத்திரவாதமும் / பிரதிநிதித்துவமும் அளிக்கவில்லை.
விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனளித்த வங்கியின் இணையதளத்தில் பார்வையிடலாம்: www.religarefinvest.com
இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள் மற்றும் தொலைபேசி எண்கள். Mr.K.N.பரமேஷ், Mobile No.89396 05467 அல்லது மின்னஞ்சல்: paramesh.n@religare.com, மற்றும் Mr.A.வில்சன், Mobile No.93110 56699 அல்லது மின்னஞ்சல்: a.wilson@religare.com
இடம் : திருச்சி
தேதி : 07.02.2024
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, M/s.ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட்

UJJIVAN SMALL FINANCE BANK
பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: 75 D, ப்ளாக், கதவு எண்.4, சாலை ரோடு, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு 620018

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.
SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழுக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழுக்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	08.01.2024 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1631220280000004 & 1631230050000001 1. M/s.ராணி ஏஜென்சீஸ் 2. ஆனந்தநாரு ஜேம்ஸ் 3. ரோஸ்லின் மேரி	(i) 17.12.2022 (ii) 15.12.2022 அன்றுள்ளபடி ₹ 79,72,787/- (ரூபாய் எழுபத்து ஒன்பது லட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து எழுநூற்று எண்பத்து ஏழு மட்டும்) (ii) 06.03.2023 (அடையாளபூர்வ) & 26.12.2023 (நேரடியான)	₹ 92,29,439.19 (ரூபாய் தொண்ணூற்று இரண்டு லட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து நானூற்று முப்பத்து ஒன்பது மற்றும் பைசா பத்தொன்பது மட்டும்)	₹ 77,00,000/- (ரூபாய் எழுபத்து ஏழு லட்சம் மட்டும்)	₹ 7,70,000/- (ரூபாய் ஏழு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்)

சொத்து விவரம் : புதுக்கோட்டை பதிவு மாவட்டம், விராலிமலை சார்-பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்கள்.152/3 & 152/3A1, புதிய சர்வே எண்.152/3A1D, பூதகுடி கிராமம், பூதகுடி கிராம பஞ்சாயத்து, விராலிமலை யூனியன், முள்ளூர் இலுப்பூர் தாலுகா, தற்போது விராலிமலை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்னும் முகவரியில் 3165 சதுர அடி மனை மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 111.5 அடி, தெற்கு திசையில் 102.25 அடி, தெற்கு வடக்காக மேற்கு திசையில் 29.5 அடி, கிழக்கு திசையில் 29.5 அடி, மொத்தம் 3165 சதுர அடி (294.036 சதுர மீட்டர்). எல்லைகள்: கிழக்கு: தேசிய நெடுஞ்சாலை, மேற்கு: பழனிவேல்-க்கு சொந்தமான சொத்து, வடக்கு: ஜோதிலட்சுமி மற்றும் முத்துசாமி-க்கு சொந்தமான சொத்து, தெற்கு: ராணே TRW கம்பெனி.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 15.03.2024 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 14.03.2024 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை
சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 13.03.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mr.பிரசன்னா JLC - Mob : 96261 56568 / S. ஞானவேல் - 98410 17131 / R.புஷ்பகாந்த் – 98431 14222.

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Vinod Chauhan Mob.No. 98138 87931) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com
தேதி: 09.02.2024
இடம்: பெங்களூரு
ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

கடன் வசூல் தீர்ப்பாயம் - II, சென்னை முன்னிலையில்
6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600006.
O.A.No.397 of 2023

M/s. சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்,
படுக்கோட்டை கிளை.
பிரதிநிதி அதனுடைய கிளை மேலாளர் : திரு. B. ஜீவேந்திரன்
வணிகம் நடைபெறும் இடம் : எண்.80. தரை தளம்.
தலையாரி தெரு. பட்டுக்கோட்டை - 614601. தஞ்சாவூர். ... மனுதாரர்

எதிர்
1) டாக்டர் S. பிரேம்நாத், த/பெ. G. சுசீந்திரன்.
2) திரு. G. சுசீந்திரன், த/பெ. லேட் கோவிந்தசாமி.
3) திருமதி S. லதா, க/பெ. G. சுசீந்திரன்.
4) திருமதி R. சாந்தா, க/பெ. S.R. ராமானுஜம். (லேட் S.R. ரவியின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்)
5) திருமதி R. சுதா, க/பெ. S.R. ரவி. (லேட் S.R. ரவியின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்) ...பிரதிவாதிகள்

பெறுநர் :
1) திருமதி R. சாந்தா, க/பெ. S.R. ராமானுஜம்.
2) திருமதி R. சுதா, க/பெ. S.R. ரவி.
(1) & (2) இருவரின் வசிப்பிடம் : சச்சிதானந்தன் செட்டியார் ரோடு. தங்கவேல் நகர். பட்டுக்கோட்டை டவுன் & தாலுகா. பட்டுக்கோட்டை - 614601. தஞ்சாவூர் ...பிரதிவாதிகள்

பிரதிவாதிகள் எண்.4 & 5 in O.A.எண்.397 of 2023

மேற்கண்ட O.A., மனுதாரர் வங்கியால் தாக்கல் செய்யப்பட்டது. 25-01-2024 அன்று பதிவாளர், DRT-II, சென்னை. அவர்கள் 16-02-2024க்குள் திருப்பி அனுப்பும்படி உங்களுக்கு அறிவிப்பை ஆர்டர் செய்தது. தயவுசெய்து கவனிக்கவும். மேற்கண்ட O.A-ன்படி நீங்கள் ஆஜராக வேண்டும். காலை 11.30 மணிக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது பதிவாளர் நீதிமன்றத்தின் முன் நீங்கள் இல்லாத நிலையில் மேற்கண்ட வழக்கு சட்டத்திற்குத் தெரிந்த முறையில் முடிவு செய்யப்படும்.
(ஹஸ்முக் S சுராணா)
மனுதாரரின் வழக்கறிஞர்

यूनियन बैंक ऑफ इंडिया Union Bank of India
भारत सरकार का उपक्रम A Government of India Undertaking
கோட்டைப்பட்டினம் கிளை
எண் 1146, ஆவுடையார்கோயில் சாலை, கோட்டைப்பட்டினம், புதுக்கோட்டை 614619

விதி -8 (1) சுவாதீன (POSSESSION) அறிவிப்பு
(அசையா சொத்துக்கானது)

2002 ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் (இரண்டாவது) சட்டத்தின் கீழ் (54 of 2002) இங்கு கையொப்பமிட்டுள்ளவர் யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, கோட்டைப்பட்டினம் கிளையின் (SOL 13782) அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி சட்டம் பிரிவு 13 (12) மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தாரர் திரு. கப்பையா. L S/o லட